# பத்திரிக்கை செய்தி

## அரசு வழங்கும் நிவாரண உதவி வேண்டி கொலையுண்டவரின் குடும்பத்திற்கு வாரிசு சான்றிதழ் வழங்க ரூ.2,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய வருவாய் ஆய்வாளர் கைது

புகார்தாரர் திரு.ஜீவா, இந்திரா நகர், ரங்கேகவுண்டன்பாளையம், திருப்பூர் தாலுகா, திருப்பூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் நகரில் நடக்கும் காய்கறி சந்தைகளில் கடை வைத்து காய்கறி வியாபாரம் செய்து வருகிறார். புகார்தாரரின் தந்தை திரு.ராஜேந்திரன் முன் விரோதம் காரணமாக கொலை செய்துவிட்டனர். இது சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டது. தனது தந்தையின் இறந்தது சம்பந்தமாக அரசு வழங்கும் நிவாரண உதவி வேண்டி புகார்தாரரின் அம்மா வாரிசு சான்றிதழ் கேட்டு நல்லூர் இ-சேவை மையத்தில் கடந்த 17.05.2024ம் தேதி விண்ணப்பித்திருந்தார். திருமதி.மைதிலி, வருவாய் ஆய்வாளர், திருப்பூர் தெற்கு தாலுகா, திருப்பூர் மாவட்டம் அவர்கள் 18.05.2024ம் தேதி புகார்தாரருக்கு போன் செய்து தன்னை நேரில் வந்து பார்க்கும்படி கூறியுள்ளார். அன்றைய தினமே புகார்தாரர் திருமதி.மைதிலி, வருவாய் ஆய்வாளரை சந்தித்து வாரிசு சான்றிதழ் பற்றி கேட்டுள்ளார். திருமதி.மைதிலி, வருவாய் ஆய்வாளர், விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து புகார்தாரருக்கு வாரிசு சான்றிதழ் வழங்க தனக்கு ரூ.7,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டு பின்னர் அதனை ரூ.2,000/-மாக குறைத்துள்ளார்கள். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், திருப்பூர் மாவட்ட லஞ்ச ஒழிப்பு பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 29.05.2024, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திருமதி.மைதிலி, வருவாய் ஆய்வாளர் அவர்கள் லஞ்ச பணம் ரூ.2,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.